# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பிரதேச சபைகள் (திருத்தம்)

***1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜயந்த கெட்டகொட அவர்களால்
2023, யூலை மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூன் மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***185 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***பிரதேச சபைகள் (திருத்தம்)***

## *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1***. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*5(2)இ எனும் புதிய பிரிவினைச் சேர்த்தல்*

***2***. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 5(2)ஆ பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டு முதன்மைச் சட்டவாக்கத்தின் 5(2)இ பிரிவாக பயனுடையதாதல் வேண்டும்:-

"(இ) உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்த லொன்றை நடாத்துவதற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப் பத்தில் நாட்டிலே ஏற்பட்டுள்ள யாதேனுமொரு நெருக்கடியான நிலை காரணமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளவாறு குறித்த தேர்தலை நடாத்துவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை எழுந்துள்ள சந்தர்ப்பத்தின் போது, மேற்படி 5(2)ஆ கட்டளையின் பிரகாரம் அமைச்சர் அவர்களினால் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட கால எல்லை 12 மாதங்களைத் தாண்டியுள்ள போதிலும் கூட அமைச்சர் அவர்களினால் தீர்மானிக்கப்படுகின்ற மேலுமொரு காலப்பகுதிக்கு குறித்த கலைக்கப்பட்ட அதிகாரசபையை மீண்டும் கூட்டுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***3***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.